தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வன பாதுகாப்புத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும்

பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானப் பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	பரிட்சை மீதியின் பிரகாரம் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானம் (வருமானத் தலைப்பு – 2002-01-02) ரூபா 853,449,591 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 01 படிவத்தில் அந்த வருமானம் ரூபா 935,449,591 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 82,000,000 இனால் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் SA 21 கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அந்த வருமானக் குறியீட்டின் கீழ் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களால்	திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் திணைக்களத்திற்காக ஏனைய தலைப்புக்களில் சேகரிக்கப்பட்ட வருமானமாக சரியாக வகைப்படுத்தப்பட்ட போதும் அந்த தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கும் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட	பரீட்சை மீதி மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் சரியான தொகையினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 120,274,588 ஆக இருந்த போதிலும் அது ஏசீஏ 01 படிவத்தில் ரூபா 38,274,588 ஆக ரூபா 82,000,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	வழுக்கள் ஏற்பட்டிருந்தது.	
(ii)	ஏசீஏ 01(i) நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் ஆண்டின் ஆரம்ப மீதியாக கடந்த ஆண்டிலும், அதற்கு முன்னைய ஆண்டிலும் நிலுவை தொகைகளின் ஆரம்ப மீதி மாத்திரம் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ஒவ்வொரு வருடத்தின் இறுதி மீதி அடுத்து வரும் ஆண்டின் ஆரம்ப மீதியாக ஆரம்ப மீதி நிரலில் காண்பிக்கப்பட்டமையால் நிலுவை வருமானங்களின் ஆரம்ப மீதியில் மொத்த கூட்டுத்தொகை ரூபா 2,069,474,187 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்தக் கூற்றில் அறிக்கை இடப்படுகின்ற ஆண்டுக்குரிய நிலுவைத் தொகை நிரலில் மீளாய்வாண்டிற்குரிய நிலுவைப் பணம் மாத்திரம் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் கடந்த ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் நிலுவை மீதியும் அந்த நிரலில் காண்பிக்கப்பட்டமையால் அறிக்கையிடப்படுகின்ற ஆண்டிற்குரிய நிலுவைத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 218,637,752 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் நிதியாண்டுகளில் சரியாக நிதிக்கூற்றுக்களில் தகவல்களை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமான மீதி நிலுவை வருமானக் கூற்றில் படிவத்திற்கு இணங்க சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டிற்குரிய நிலுவைத் தொகை மீளாய்வாண்டின் போதே அறவிடப்படாதிருந்த போதும் ஏசீஏ 1(i) இல் பிழையாக அறிக்கையிடப்படுகின்ற ஆண்டிற்குரிய நிலுவைப் பண அறவிடல் ரூபா 3,882,476 காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் நிதியாண்டுகளில் சரியாக நிதிக்கூற்றுக்களில் தகவல்களை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவை வருமானம் அறவிடல் சரியாக நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றில் (ஏசீஏ – 1) நிலுவை வருமானம் சேகரித்தல் எதுவும் காண்பிக்கப்படாதிருந்த போதும் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 1(i)) நிலுவை வருமானம் அறவிடல்களின் கூட்டு மொத்தமாக ரூபா 1,750,652,632 காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் நிதியாண்டுகளில் சரியாக நிதிக்கூற்றுக்களில் தகவல்களை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவை வருமானம் அறவிடல் சரியாக நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும்.

(v)	2009 முதல் 2019 வரையான ஆண்டுகளில் தொலைத்தொடர்பு கோபுரங்களை பராமரித்துச் செல்லல் மற்றும் வனம்சார் பொருட்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 317,624,265 வருமானம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாது இருந்த போதும் அது ஏசீஏ-01(i) நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நிதியாண்டுகளில் சரியாக நிதிக்கூற்றுக்களில் தகவல்களை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சகல நிலுவை வருமானங்களையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் அவற்றை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) மீண்டெழும் செலவினம்

நிதிக்கூற்றுக்களுக்கு உரிய மீண்டெழும் செலவினங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-2(i) படிவத்தில் செலவின விடயம் 1101 – உள்நாட்டு பிரயாணச் செலவின நிதி ஏற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றல்களாக ரூபா 8,830,000 காண்பிக்கப்பட்ட போதிலும் ஆண்டின் போது அவ்வாறான மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் செலவின விடயம் 1409 - ஏனைய சேவைச் செலவின நிதியேற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களாக ரூபா 9,200,000 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக அந்த செலவின விடயத்தின் கீழ் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்கள் ரூபா 3,800,000 ஆகும்.	எதிர்வரும் நிதியாண்டுகளின் போது சரியாக நிதிக்கூற்றுக்களில் தகவல்களை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்களை சரியாகக் காண்பித்து அதன் பிரகாரம் செலவின விடங்களுக்குரிய தேறிய நிதியேற்பாடு சரியாகக் காண்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	கட்டுநிதி சீராக்கல் கூற்றின் பிரகாரம் ஏனைய நிறுவனங்களினால் அறிக்கையிடப்படுகின்ற நிறுவனத்திற்காக ஏற்பட்ட செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,996,735 ஆக இருந்த போதிலும் அது செலவின விடயங்கள் தொடர்பான கூற்று ஏசீஏ-2(ii) இன் நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவின நிரலில் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழ் உள்ளடக்கப்படாமல் காசேட்டின் பிரகாரம் செலவின நிரலில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது.	தாமத வழுக்களின் காரணமாக அந்த தொகை உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் சரியாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு உத்தியோத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிக் கூற்றுக்களுக்கு உரிய தகவல்கள் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திரண்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் திறைசேரி அச்சிடல் குறுப்பு (எஸ்.ஏ 82) இன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 சொத்து விடயங்களின் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,714,970,273 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு அந்த மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,159,853,958 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்களில் ஆரம்ப மீதி ரூபா 4,444,883,685 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் சொத்துக்களை உள்ளடக்குதலில் திணைக்களத்துக்கு தீர்த்து வைக்க முடியாத பிரச்சனைகள் ஏற்பட்டிருந்ததுடன் அது அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் அதில் இருந்து வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் சொத்துக்களை சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதியல்லாச் சொத்துக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி அச்சிடல் SA 52 இன் பிரகாரம் ஏனைய தலைப்புக்களினால் முற்பணம் ‘‘பீ’’ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 10,297,208 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி சீராக்கல் கூற்றில் அது ரூபா 10,130,804 ஆக ரூபா 166,404 குறைத்து சீராக்கப்பட்டிருந்தது.	SA 52 இன் பிரகாரம் முற்பணம் ‘‘பீ’’ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட சகல செலவு வைத்தல்களின் பெறுமதி ரூபா 10,297,208 ஆகும். ஏனைய தலைப்புக்களினால் முற்பணம் ‘‘பீ’’ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்களின் பெறுமதி ரூபா 10,120,829 ஆகும். அது கட்டுநிதி சீராக்கல் கூற்றில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் தாமத வழுக்களினால் கட்டுநிதி சீராக்கல் கூற்றில் ரூபா 10,130,804 தொகையே சீராக்கப்பட்டிருந்தது.	கட்டுநிதி சீராக்கல் கூற்றில் குறிப்பிட வேண்டிய மீதிகளை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) **கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திரண்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (எஸ்ஏ 82) ஆரம்ப மீதியின் சேர்த்தல்களாக 03 சொத்து விடயங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 4,711,937 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	அரச கணக்குகள் திணைக்கள உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் சொத்து சீராக்கங்கள் முறைமைப் படுத்தப்பட்டுள்ளது.	நிதியல்லாச் சொத்துக்களில் சேரக்கப்பட்டுள்ள விடயம் மற்றும் அவற்றின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்படுகின்ற விடயங்களை நான் வெளியிடுகின்றேன்.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கீழே குறிப்பிடப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை.

அவதானிப்பு	இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு
மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு 06 நிதியல்லாச் சொத்து விடயங்களின் ஆரம்ப மீதி ரூபா 4,444,883,685 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	1.6.1(இ)

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு		இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு
1.6.1(அ)(i)	ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட வேண்டிய நிலுவை வருமான மீதி, நிலுவை வருமானம் அறவிடலின் முன்னைய ஆண்டுகளிலும் தாக்கமளித்த முறையில் சரியாக நிலுவை வருமானக் கூற்றில் சீராக்கப்பட வேண்டியிருந்தமை.	1.6.1(அ)(ii)
1.6.1(அ)(ii)	அரசாங்கத்தின் காடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் (2002.01.02) தலைப்பின் கீழ் மற்றும் ஏனைய நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட வருமானங்கள் உரிய பிரகாரம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை.	1.6.1(அ)(i)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
மீளாய்வாண்டின் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வருமானக் குறியீடு 2002-01-02 இன் கீழ் அரசாங்கதின் காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானங்கள் ஆரம்பத்தில் ரூபா 1,600,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 973,578,228 மாத்திரம் சேகரிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 626,421,772 இனால் அதாவது 39 சதவீதத்தால் வருமான எல்லையை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.	வருமானக் குறியீட்டு இலக்கம் 2002.01.02 இல் அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 973,578,228 ஆகும். அந்த ஆண்டில் அதன் நிலுவை வருமானம் ரூபா 515,646,000 ஆக இருந்ததுடன் வருமானம் மற்றும் நிலுவை வருமானத்தின் கூட்டுமொத்தம் ரூபா 1,489,224,228 ஆகும். மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது முரண்கள் ரூபா 110,775,772 ஆகும். அந்த வருமானம் கிடைக்காமைக்கான காரணம் மதிப்பீடு செய்யப்பட்ட முறையில் சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தராமை, நிலப் பகுதிகளுக்கு செல்லுதல் வசதியீனமாக இருந்தமை மற்றும் ஹெக்ரேயருக்கு போதியளவான மரங்களின் எண்ணிக்கை காணப்படாமையின் காரணமாக சில கம்பனிகளால் ரேசின் விடுவிப்பு சமர்ப்பிக்கப்படாமை, நாட்டில் பணவீக்கம் அதிகரித்ததன் காரணமாக விவசாயிகள் வணிக ரீதியான பயிர்ச்செய்கை களுக்காக நாற்றுக் கன்றுகளை கொள்வனவு செய்தல் குறைவடைந்தமை, சந்தையில் மாதிரிப் பொருட்கள் அதிகரித்தமை மற்றும் அதனுடன் ஒப்பீடு செய்யும் போது மரத் தளபாடங்களின் விலைகள் அதிகரித்தமையால் நுகர்வோர்களால் மரத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் குறைவடைந்தமை மற்றும் அதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மர வியாபரங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்க வில்லை.	அறவிட முடியுமான வருமானங்களை உச்ச அளவில் அடைந்து கொள்வதற்கும், சரியான வருமான மதிப்பீட்டைத் தயாரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது சரியான எதிர்வுகூறல் மேற்கொள்ளப்படாமையினால் மீளாய்வாண்டில் 02 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய	எதிர்வரும் நிதியாண்டின் போது செலவின மதிப்பீடு திணைக்களத்தின் உள்ளபடியான தேவையின் பிரகாரம்	நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரித்து

	நிதியேற்பாட்டின் கூட்டுத்தொகையான ரூபா 13,800,000 தொகையில் ரூபா 4,303,552 அதாவது 28 சதவீதம் மற்றும் 74 சதவீதம் மற்றும் மூலதன செலவின விடயம் ஒன்றில் தேறிய நிதியேற்பாடு ரூபா 6,900,000 தொகையில் ரூபா 4,020,767 அதாவது 58 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.	சரியாக தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	செலவினம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக 07 மீண்டெழும் செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடான ரூபா 1,198,000,000 தொகையில் ரூபா 39,894,300 மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருக்கும் போது, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த மீதிகளில் மேலும் ரூபா 106,381,625 அதாவது 5 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.	எதிர்வரும் நிதியாண்டின் போது நிதியேற்பாடுகளின் மாற்றல்களை குறைத்து மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரித்து செலவினம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக 68 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,709,272 செலவினம் 2025 இன் முதல் 02 மாதங்களின் போது தீர்த்து வைக்கப்பட்டதுடன் இந்த செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (iii) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்பாக உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இனங்காணப்பட்டிருந்த கடப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களில் நிதிப்பிரமாணம் 115 அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.	ஆண்டுக்குரிய பொறுப்புக்களை இனங்கண்டு அவற்றை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டடுள்ளது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	அவதானிப்பு இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	1947 இன் 08 ஆம் இலக்க காணி கட்டளைச் சட்டம் 224 ஆம் பிரிவு	-	அராசங்கத்தின் திணைக்களங்களுக்கு உரிய காணிகளை அளவிடல்களை மேற்கொண்டு முறையாகக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வனப் பாதுகாப்பு திணைக்களங்களுக்கு உரிய 79.38 ஹெக்ரேயர் காணிகளின் உரித்தை கையேற்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தை கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்த 81.28 ஹெக்ரேயர் காணி அளவில் 1.9 ஹெக்ரேயர் அளவு மாத்திரம் இதுவரையில் உரித்து கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரிய காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை				
(i)	நிதிப்பிரமாணம் 396	974,058	11 வங்கிக் கணக்குகளுக்கு உரிய 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விநியோகிக்கப் பட்ட 06 மாதங்களை விஞ்சிய	2025 மே மாதத்தின் வங்கி இணக்கக் கூற்றின் போது உரிய காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை	06 மாதங்களை விஞ்சிய காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

			காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.	வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 571(3)	327,280,296	மீளாய்வாண்டின் இறுதியில் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.	நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.	02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரை**
(அ)	2023 ஆம் ஆண்டின் போது முடிவடைந்த சுற்றாடல் முறைமை பாதுகாப்பு முகாமைத்துவ செயற்திட்டத்திற்குரிய 33 உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் செயலிழந்து காணப்பட்ட போதும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படாது இருந்ததுடன் அந்த கணக்குகளை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வங்கிக் கணக்குகளுக்கு இடையே 15 கணக்குளை மூடுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 2024 திசெம்பர் 28 ஆந் திகதி பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நடவடிக்கைகள் முடிவடைந்த மேலும் 10 கணக்குகள் 2025 மே மாதத்தில் அங்கீகாரத்திற்காக பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படும். மிகுதி 08 கணக்குகள் இந்த ஆண்டின் போது மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டங்கள் முடிவடைந்த பின்னர் செயலிழந்த வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வங்கி நடைமுறைக் கணக்கில் 36 சந்தர்ப்பங்களின் போது நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 34,610,497 தொடர்பாக கால ரீதியாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்து இனங்காணாமையினால் காசேட்டுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 மே மாதத்தில் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நடைமுறைக் கணக்கில் நேரடியாக செலவு வைக்கப்பட்டுள்ள பணத்தை இணங்கண்டு அவற்றை கால ரீதியிலும் சரியாகவும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 3(2) கட்டளையின் பிரகாரம் மீனாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட 512 காடுகளுக்காக முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த திட்டங்களில் 459 திட்டங்கள் அங்கீகரிக்கப்படாமையினால் கட்டளைச் சட்டத்தின் 3(3) கட்டளையின் பிரகாரம் அந்த திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டிருக்கவில்லை	2021 ஆம் ஆண்டு முதல் வன முகாமைத்துவ திட்டங்களை தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட போதும், கிடைக்கப்பெற்ற வரையறுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் காரணமாக ஒரு வருடத்திற்கு வன முகாமைத்துவ திட்டங்கள் 50 ஆக வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும் வருடாந்த வன முகாமைத்துவ திட்டங்களை தயாரிக்கும் இலக்கில் வன முகாமைத்துவத் திட்டம் 50 காணப்பட்ட போதும் பிரதேசத்தில் காணப்படுகின்ற உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பிரதான அலுவலகங்களின் மூலம் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் அடிப்படையில் அந்த இலக்குகளை கருத்தில் கொண்டு வன முகாமைத்து திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே திட்டங்களை அங்கீகரிப்பதற்காக வன சட்ட விதிகளின் பின்புலம் 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கட்டளைகளின்	கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முறையில் தாமதம் இன்றி வன முகாமைத்துவ திட்டங்களைத் தயாரித்து அங்கீகரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பின்னரே தயாரிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	ஒதுக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகளுக்காக முகாமைத்துவ திட்டம் தயாரிக்கும் அடிப்படை நோக்கமான உயிரியல் பல்வகைமை மற்றும் மண் மற்றும் நீர் பாதுகாப்பு மரபணு வளங்கள், அரிய மற்றும் அழிந்துவரும் தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் காடுகளை விசேடமாக பாதுகாக்க வேண்டியிருந்த போதிலும் 897 காடுகளில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டு 01 இற்கும் 19 வருடங்கள் வரையான நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் இந்த முகாமைத்துவத் திட்டம் அங்கீகரிக்கப்படாமையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகளாக வர்த்தமானி மூலம் வெளியிடுதல் மேற்கூறப்பட்ட நோக்கங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	வனப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 3(2)(1) பிரிவின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட காடுகளுக்காகவும் 3(அ)(3) பிரிவின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட காடுகளுக்காவும் வனப் பாதுகாப்பு நாயகத்தால் வன முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் 1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் அதற்காக வன பிரமாணங்கள் வர்த்தமானி மூலம் வெளியிடல் வேண்டும். அதன் பிரகாரம் 2021 இல் பிரமாணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் வன முகாமைத்துவத் திட்டம் தயாரிப்பதற்காக வழிகாட்டல் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு முதல் வன முகாமைத்துவ திட்டம் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முறையில் தாமதம் இன்றி வன முகாமைத்துவ திட்டங்களைத் தயாரித்து அங்கீகரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
கம்பகா மாவட்டத்திற்குரிய கம்பஹா பகுதியில் 13 காடுகள் மற்றும் மீரிகம பகுதியில் 19 காடுகள் GPS தொழில்நுட்பம் மூலம் மற்றும் நில அளவைத் திணைக்களத்தால் அளவிடப்பட்ட போதும் கணக்காய்வுத் திகதியான 2025 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் பாதுகாக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட பிரதேசமாக வரித்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	‘‘நிலையான காடுகள் முகாமைத்துவம் மூலம் காணிப் பிரச்சனைகளை தீர்த்து வைத்தல்’’ நிகழ்ச்சித் திட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களில் முடிவடைந்த உடன் நாட்டில் ஏனைய மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத காடுகள் ஒதுக்கப் பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பிரச்சனைகள் உள்ள காடுகளின் எல்லையை மீளாய்வு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.	பாதுகாக்கப்பட்ட / ஒதுக்கப்பட்ட காடுகளை வர்த்தமானியில் பிரசுரிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துல் வேண்டும்.

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2023 திசெம்பர் 18 ஆந் திகதிய தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஒன்று ரூபா 502,000 (வட் இன்றி) விலையில் 05 ரோன் கமராக்கள் கொள்வனவு செய்வதற்கு 2023 திசெம்பர் 18 ஆந் திகதி பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த எல்லையை விஞ்சி ரூபா 3,463,800 தொகையில் 06 ரோன் கெமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த கொள்வனவின் போது 2006 இன் பெறுகைகள் வழிகாட்டியின் 5.3.11 இன் பிரகாரம் பெறப்பட வேண்டிய கேள்வி காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளுக்கு இடையே கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 05 ரோன் கெமராக்களுக்காக செலவாகின்ற தொகையை கவனத்தில் கொள்ளும் போது ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டு எல்லையில் மேலும் ஒரு ரோன் கெமரா கொள்வனவு செய்வதற்கு முடியுமாகக் காணப்பட்டமையால் அந்த நிதியேற்பாட்டை பயன்படுத்தி மேலும் ஒரு ரோன் கெமரா கொள்வனவு செய்வதற்கு DFC/PLE/2/2/9 ஆம் இலக்க 2023.12 திகதியின்றிய கடிதம் மூலம் பெறுகைக் குழு தலைவருக்கு கோரிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைக் குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன் திணைக்கள தேவையினை சரியாக இனங்காண்டு பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	2023 திசெம்பர் 27 ஆந் திகதி பிரதான அலுவலகத்திற்கு கிடைத்த ரோன் கெமரா ஒன்று திருகோணமலை மாவட்ட வன அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு 06 மாத காலங்கள் எடுத்தமையால் ஒரு வருட உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்தக் கமராவின் உத்தரவாத காலம் அரைவாசி செல்லும் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ரோன் கமரா பயன்பாடு மற்றும் செயற்படுத்தல் நிலை தொடர்பான பயிற்சி ஒன்று திருகோணமலை மாவட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கியதன் பின்னர் 2024 யூன் 18 ஆந் திகதி திருகோணமலை மாவட்டத்திற்கு ரோன் கெமரா விநியோகிக்கப்பட்டிருந்தது.	திணைக்கள தேவையினை இனங்கண்டு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் அவை தேவையான மாவட்ட வன அலுவலகங்களுக்கு தாமதம் இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	ரோன் கமரா பயன்படுத்தல் தொடர்பான முறையான பயிற்சி ஒன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கும், அவற்றின் பராமரிப்பு மற்றும் சேவைகள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் கவனம் செலுத்தப்படாது இருந்ததுடன் அது தொடர்பான கேள்வி ஆவணங்களில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஆரம்ப இணக்கப்பாட்டின் அடிப்படையில் ரோன் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான மாதிரிகள் தயாரிக்கப்பட்டதுடன் அந்த குழு வன பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அன்றி ரோன் உபகரணங்கள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துகின்ற இலங்கையின் அதிகாரம் பெற்ற நிறுவனம் ஆன சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் விமான சேவை ஆராய்ச்சி (ஆளில்லா விமான முறைமை) உத்தியோகத்தர், பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப பிரிவின் தொடர்பாடல் ஆலோசனையாளர் மற்றும் கணக்காளரை உள்ளடக்கியிருந்தது. அவர்கள் சகலரும் ரோன் பயன்பாடு தொடர்பான பயிற்சி ஒன்றை மாதிரிகளில் உள்ளடக்குதல் பிரச்சினையாக இருக்கும் என முடிவுசெய்திருந்தனர்.	பெறுகை நடவடிக்கைகளை திட்டமிடும் போது கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காகவும் கவனம் செலுத்தி கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்களத்திற்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படாத ரூபா 14,035,000 கிரயமான 143 வாகனங்கள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 10 வாகனங்கள் வன பாதுகாப்பு நாயகத்தின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் உடைந்ததாக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 99 வாகனங்களுக்கு இடையே 65 வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் 29 வாகனங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த 29 வாகனங்கள் உடைந்த பொருட்களாக விரைவாக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடிய வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கும் பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2017 முதல் 2023 வரையான காலத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 1,037,314 ஆன இழப்புகள் மற்றும் நட்டங்கள் 10 சம்பவங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதற்கும், 2013 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான 11 வருட காலத்தில் ஏற்பட்ட ரூபா 5,493,264 ஆன இழப்புக்கள் மற்றும் நட்டங்களில் 15 சம்பவங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் 2025 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இழப்பு நட்டங்கள் தொடர்பான 10 சம்பவங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்பம் மற்றும் முழுமையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து அந்த கோவைகளில் மிகுதி நடவடிக்கைகள் நாளது வரையாக்கப்பட்டுள்ளது.	இழப்பு நட்டம் தொடர்பாக ஆரம்பம் மற்றும் முழுமையான அறிக்கை விரைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்களில் 03 சம்பவங்களின் நட்டம் 2025 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	நட்ட இழப்பு சம்பவங்கள் தொடர்பாக மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு தாமதம் இன்றி அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நட்ட இழப்புக்களை சரியாகவும் தாமதம் இன்றியும் மதிப்பீடு செய்து ஆவணங்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
ஹொரகெலே நாற்றுப் பண்ணையில் 2022 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட 2025 சனவரி 23 இல் உள்ளவாறு ரூபா 800,000 பெறுமதியான 160 வேர்த் தண்டு தாவரங்கள் காணப்பட்டதுடன் அவை உற்பத்தி செய்யப்பட்ட	02, 03 வருடங்கள் அளவிலான காலமாக பராமரிக்கப்படுகின்ற கன்றுகள் அதிகமாக வளர்தல் சாதாரண நிலைமை ஆகும். செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆண்டின் இறுதி வரையிலும் முடிவடையாமல் இருந்தமையால் கன்றுகளை நட்டுதல் கைவிடப்பட்டிருந்தது.	தேவைகளின் பிரகாரம் கன்றுகள் உற்பத்தி செய்வதற்கும், அதிகளவில் வளர்ந்த கன்றுகளை உடனடியாக விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தேவைகளுக்கு விநியோகிக்காமையின் காரணமாக நாற்று மேடைகளில் வளர்ந்து காணப்பட்டது. மேலும் 2019, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 294,050 பெறுமதியான 1,577 கன்றுகள் அந்த பாத்திரங்களில் அதிகமாக வளர்ந்து காணப்பட்டது.	இதனால் இந்த கன்றுகள் நாற்று மேடையில் வளர்ந்து காணப்பட்டது. தற்போது செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் அடுத்த உலக சுற்றாடல் தினம் அளவில் அந்த செயற்திட்டங்களுக்கு உரிய சில நிலையங்களில் மரம் நடுவதற்காக இந்த செடிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரை**
(அ)	திணைக்களத்தின் பணி ஒன்றான வன மர உற்பத்தியினை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதன் மூலம் மண் மற்றும் நீர் வளங்களை பாதுகாப்பதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 2025 சனவரி 24 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்திற்கு உரிய அளவள பாதுகாப்புப் பிரதேசத்தில் பௌதீக கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது முறையற்றதாக அகற்றப்பட்டிருந்த பிளாஸ்டிக், பொலித்தீன் மற்றும் ஏனைய உக்காத கழிவுப் பொருட்கள் ஒதுக்கப் பிரதேசத்திலும் மற்றும் அது சார்ந்த அதனை அண்மித்த வாய்க்கால்களிலும் அகற்றப்பட்டிருந்தது. இது இயற்கை சுற்றாடல் முறைமையின் செயற்படு நிலைமைக்கு இடையூறாக இருந்தமை மற்றும் ஒதுக்கப் பிரதேசத்தின் நிலைபேறான இருப்பிற்கும் அச்சுறுத்தலாக இருந்தது.	குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்தில் அத்தனகல்ல பிரதேச சபையின் கவனத்திற்கு அனுப்புவதற்காக பணிப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு நான் அறிவித்துள்ளதுடன் Alumex நிறுவனத்தின் மூலம் இந்த இடத்தில் உள்ள சில குப்பைக் கொள்கலன்களுக்கு மேலதிகமாக மேலும் சில கொள்கலன்களை வழங்குவதற்கு இணக்கம் தெரவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இடத்தில் குப்பைகளை அகற்றுவதற்காக IUCN (International Union oF Conservation & Nature) நிறுவனத்தின் பங்குபற்றலுடன் 10 அறிவித்தல் பதாதைகள் பொருத்தப்பட்ட போதும் இங்கு வருகை தருகின்ற நபர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை குறைத்துக் கொள்வதற்காக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு சமூக வன மற்றும் வன செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் நோக்கமான வன வளங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	15.15 ஹெக்ரேயர் பரப்பளவை உடைய ஹொரக்கலே ஒதுக்க காட்டுப் பிரதேசத்தில் 10 ஏக்கர் அளவு 2018 ஆம் ஆண்டின் போது வன பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வனப் பயிர்செய்கை 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி 23 மற்றும் 24 என்ற இரு தினங்களிலும் 03 ஹெக்ரேயர் மற்றும் 60 பேர்ச்சிலும், 2022 ஆம் ஆண்டின் மார்ச் 05 ஆந் திகதி 04 ஹெக்ரேயரிலும் தீ ஏற்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் பின்னர் தீயணைப்பு பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்த ஆண்டிலும் நிதியேற்பாடு கிடைக்கப் பெற்றதுடன் தீயணைப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டின் போது இதில் சமூக விழிப்புணர்வு மற்றும் உலர் காலங்களில் உத்தியோகத்தர்கள் தீயினைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு தயாராக இருப்பதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.	தீயினால் வன அழிவினைக் குறைக்கும் வகையில் வனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கம்பஹா மாவட்டத்திற்குரிய மீதிரிகல ஒதுக்கப்பட்ட பிரதேசம் 1895 மே 22 ஆந் திகதி ஒதுக்கப்பட்ட காட்டுப் பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன் அந்த காணியில் 76 கூறுகள் அனுமதியற்ற பிடித்து வைத்தல்களில் காரணமாக 2018 – 2021 வரையான காலத்தில் விலகிச்செல்லும் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விலகிச்செல்லும் அறிவித்தல்களுக்காக மிகுதி நடவடிக்கைகளை எடுத்து அந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்குப் பதிலாக அந்த பிரச்சனைகளுடன் உள்ள காணி ஒதுக்கப்பட்ட காணியில் இருந்து அகற்றப்பட்டு 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி மீண்டும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் 44.9 ஹெக்ரேயர் அதாவது 112 ஏக்கர் காடுகள் அளவில் மீதிரிகல ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து இழக்கப்பட்டிருந்தது.	பழைய ஒதுக்கப்பட்ட பிரதேசத்திற்கு உரிய பண்ணைகளுக்கு வழங்கப்பட்ட காணி மற்றும் ஏனைய அனுமதியற்ற பயிர்ச் செய்கை நிலங்களுக்கான வன குற்றங்கள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிலம் புதிய ஒதுக்கப்பட்ட பிரதேச எல்லையில் இருந்து நீக்கப்பட்டமையால் வழக்கு நடவடிக்கைகள் நடாத்திச் செல்ல முடியாது இருந்ததாக சட்டமா அதிபரிடம் இருந்து ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்குகள் அகற்றப்பட்டதுடன் அந்த வன குற்றங்களுக்கு உரிய வெளியேற்ற உத்தரவு கோரப்பட்டிருந்த போதும் அதற்கான வெளியேற்ற உத்தரவு கிடைத்திருக்கவில்லை.	வனக் குற்றங்கள் தொடர்பான கட்டளைகளைப் பெற்று அந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன் ஒதுக்கப் பிரதேசங்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

(ஈ)	திணைக்களத்தில் நிலுவை ஊழியர் கடனில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மரணமடைந்த 13 உத்தியோத்தர்களிடம் இருந்து ரூபா 1,166,806 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற 30 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 2,537,628 தொகையும், வேலை நீக்கம் செய்யப்பட்ட 19 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 2,331,959 தொகையும், சேவையை விட்டுச் சென்ற 13 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,509,343 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 7,545,736 தொகை அறவிட வேண்டியிருந்தது.	2025 சனவரி 24 ஆந் திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2024(I) இன் கீழ் உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளை புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்காக 2025.03.28 ஆந் திகதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அதற்காக 2025 ஆம் ஆண்டிற்குரிய செலவின விடயம் ஒன்று தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தில் இருந்து கோரப்பட்டிருந்தது. நிலுவைக் கடன் மீதி உரிய உத்தியோகத்தர்களின் இறப்பு, ஓய்வூதியப் பணிக்கொடையில் இருந்து அல்லது பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு அறவிட முடியாத கடன் தொகையை அறவிடுதல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.	மரணமடைந்த, ஓய்வு பெற்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையில் இருந்து நீங்கிச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் கீழ் உயிரியல் பல் வகைமைப்படுத்துவதற்காக முக்கியமான பாதுகாக்கப்பட்ட பிரதேசம்/நிலங்களை மேவுகை செய்வதற்கு இனங்காணப்பட்ட போதிலும் 2024 ஆம் ஆண்டில் இந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்த ஒரு பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	நிலைபேறான நோக்கத்தை அடைவதன் கீழ் முகாமைத்துவத்தின் கீழ் வன அழிவினைத் தடுப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் பின்னர் 150 காடுகளில் 74,461,603 ஹெக்ரேயர் அளவில் ஒதுக்கப்பட்ட பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் நன்னீர் சுற்றாடல் முறைமையும் ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ளடங்கியுள்ளது. அவ்வாறே காடுகளில் ஒதுக்கப்பட்ட பிரதேசமாக வெளியிட்டதன் மூலம் அவற்றின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.	உயிரியல் பல்வகைமைக்காக முக்கியமாக பாதுகாப்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தில் 3,259 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 564 பேரில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஸ்ட நிலைக்குரிய பிரதி மற்றும் உதவி வன பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 25 பேரும், மூன்றாம் நிலைக்குரிய வன கட்டுப்பாட்டாளர் (விசேட) மற்றும் மாவட்ட வன உத்தியோகத்தர்கள் 26 பேரும், இரண்டாம் நிலைக்குரிய வன உத்தியோகத்தர்கள் 113 பேரும் மற்றும் பீட்டு வன உத்தியோகத்தர்கள் 166 பேரும் அதனிடையே இருந்தனர். இந்த பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதேச அலுவலகங்களின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுதல் மற்றும் வன குற்றங்களைத் தடுத்தல் மற்றும் திணைக்களத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதில் நேரடியாக தாக்கமளித்திருந்தது.	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட பதவிகள் யாவற்றிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அரச சேவையில் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவிற்கும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான மனித வள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.